## மொறட்டுவைப் பல்கலைக்கழகம் 2010

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1. அபிப்பிராயம்

---

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, மொறட்டுவைப் பல்கலைக்கழகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களை பராமரித்து வந்திருந்தது என்றும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு மற்றும் காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உளச்சார்புப் பரீட்சை வருமானங்களையும் செலவுகளையும் செம்மையாக்கிய பின்னர் மிகையாகவுள்ள ரூபா 1,820,610 தொகையினை ஆண்டிற்கான வருமானமாகக் காட்டுவதற்குப் பதிலாக பிற்போடப்பட்ட வருமானமாக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) 50 கற்கை நெறிகள் 04 செயற்திட்டங்கள் 07 செயலமர்வுகள் என்பவற்றின் இறுதியில் மிகுதியாகவுள்ள ரூபா 10,307,523 தொகையான மிகைகள் அந்த அந்த ஆண்டின் வருமானமாகக் கணக்குவைக்கப்பட வேண்டிய போதிலும் பிற்போட்ட வருமானமாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2003 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரையான 06 ஆண்டுகள் தொடர்பாக உத்தியோகத்தர்களினால் கோரப்படாத ரூபா 272,524 தொகையான சம்பளத்தினை தீர்த்துவைப்பதற்கு அல்லது வருமானத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பல்கலைக்கழகத்திற்கு ஏற்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது மாணவர்களிடமிருந்து அறவிட்ட ரூபா 528,246 தொகையினை வருமானமாக கணக்கிற்கு எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக ஐந்தொகையில் பொறுப்பு ஒன்றாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2010 ஆம் ஆண்டின் போது முதலீடு செய்யப்பட்ட ரூபா 6,000,000 தொகையான நிலையான வைப்புக்களிலிருந்து கிடைக்கவேண்டிய ரூபா 360,835 தொகையான வட்டி வருமானம் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் இலங்கை வங்கியின் நடைமுறைக் கணக்கில் ரூபா 3,666,664 தொகையான நேரடி செலவு வைப்புக்களையும் ரூபா 5,150 தொகையான நேரடி வரவு வைப்புக்களையும் இனங்கண்டு கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(எ) 2006 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரையான காலத்தின் போது உடைந்த பொருட்களின் விற்பனைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 2,391,311 தொகையினையும் அப்பொருட்களின் கிரயத்தினையும் உரிய கணக்கிற்கு செம்மையாக்கி அதன் இலாபம் அல்லது நட்டத்தினை வருமானங்கள் செலவுகள் கணக்கிற்கு வருடாந்தம் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியில் மாணவர் வங்கி வைப்பு தொங்கல் கணக்குகளின் மீதி ரூபா 170,651 ஆக இருந்த அதேவேளை அதனை இனங்கண்டு செம்மையாக்குவதற்குப் பதிலாக நடைமுறைப் பொறுப்பு ஒன்றாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.2 இணக்கமின்மைகள்

-------------------------------

பொதுப் பேரேட்டில் காணப்பட்ட மூலதன நிதியக் கணக்கின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 226,529,338 ஆக இருந்த போதிலும் அத்திகதியிலுள்ளவாறான ஐந்தொகையின் பிரகாரம் அந்த மீதி ரூபா 226,719,100 ஆகக் காட்டப்பட்டதன் காரணமாக அந்த மீதிகளுக்கிடையே ரூபா 189,762 தொகையான வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 09 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய இடர் கடன் ரூபா 468,030 தொகையும் 08 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய பதவிநிலைக் கடன் ரூபா 40,086 தொகையும் இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய வாகனக் கடன் ரூபா 37,400 தொகையும் இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கணனிக் கடன் ரூபா 25,500 தொகையும் 06 ஆண்டுகளாக நிலுவையாகக் காணப்பட்டதுடன் அவற்றினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழக சேமலாப நிதியத்தில் மீதி ஒன்று இல்லாதிருந்த 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 4,433,752 தொகையான உடன்படிக்கை மீறல்களையும் ரூபா 95,850 கடன் தொகையினையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உடன்படிக்கைகள் மற்றும் பிணைமுறிகளை மீறிய 28 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 29,083,664 தொகையான உடன்படிக்கைகளை மீறியமைக்கான இழப்பீட்டினையும் ரூபா 796,339 கடன் தொகையினையும், அவர்களிடமிருந்து பல்கலைக்கழக சேமலாப நிதியத் தொகையிலிருந்து அறவிடுவதற்கும் மிகுதியை அவர்களிடம் இருந்து தனிப்பட்ட ரீதியாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேற்கூறிய 14 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்த தொகையில் ரூபா 2,652,112 இனை பல்கலைக்கழக சேமலாப நிதியத்திலிருந்து அறவீடு செய்வதற்கு உரிய உத்தியோகத்தர்களினால் அங்கீகாரம்

அளிக்கப்பட்டிருந்தும் 2010 திசெம்பர் 31 வரையும் அத்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் உள்ளக விளையாட்டரங்கினை நிர்மாணிப்பதற்காக 2006 ஆம் ஆண்டிற்கு முன்னரிலிருந்து விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 4,435,700 தொகையான கடன்பட்டோர் மீதி இன்றுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) தேசிய விஞ்ஞான மன்றத்தின் மூலம் அனுசரணை அளிக்கப்பட்டிருந்த 09 ஆராய்ச்சிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,051,647 தொகையான மீதி ஒன்று மாற்றமின்றி 02 ஆண்டுகளிலிருந்து 06 ஆண்டுகள் வரையான காலமாக பல்கலைக்கழகத்தின் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காணப்பட்டதுடன் அதனைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ஏனைய நிறுவனங்களின் மூலம் அனுசரணையளிக்கப்பட்டுள்ள 08 ஆராய்ச்சிகள் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள ரூபா 2,253,144 மீதி ஒன்று 03 ஆண்டுகாலமாக மாற்றமின்றி நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காணப்பட்டதுடன் அதனைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

மீளாய்வாண்டில் காட்டப்பட்டிருந்த பின்வரும் பெறுமதிகளை ஆதாரப்படுத்தும் விபரமான பட்டோலை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அப்பெறுமதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

| | **விடயம்** | **பெறுமதி** |
|---|---|---|
| | | **ரூபா** |
| (அ) | பெறவேண்டிய வருமானம் | 14,125,829 |
| (ஆ) | செலுத்தவேண்டிய வைப்புக்கள் | 13,642,118 |
| | கூட்டுத்தொகை | 27,767,947 |

### 1.2.5 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 29(ஈ) மற்றும் 29(உ) பிரிவுகளின் பிரகாரம் பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகளை நடாத்துதல் பல்கலைக்கழகம் ஒன்றின் செயற்பணியாக இருக்கவேண்டியதுடன் நிதி அமைச்சு செயலாளரின் பிஈ/1/174/1-2003 ஆம் இலக்க 2003 சனவரி 29 ஆந் திகதிய கடிதத்தில் படிகளைச் செலுத்துவதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 380 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றுநிருபத்தினைப் பயன்படுத்தி பட்டப்பின் படிப்பு கற்கைநெறி வருமானத்திலிருந்து ரூபா 3,762,405 தொகையும் குறுகிய கால கற்கைநெறி வருமானத்திலிருந்து ரூபா 264,624 தொகையும் மீளாய்வாண்டின் போது உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 38/89 (III) ஆம் இலக்க 1995 ஒக்டோபர் 10 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நியதிச்சட்ட சபைகளின் உத்தியோகத்தர்களுக்கு மொழித் தேர்ச்சிப் படிகள் செலுத்தமுடியாது என பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் பீஈ/1/174/11(பீ) இலக்க 1998 மார்ச் 10 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுத் தலைவருக்குத் தெரியப்படுத்தியிருந்ததனால் உடனடியாக அமுலுக்குவரும் வகையில் பல்கலைக்கழக முறையின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் செலுத்தப்பட்ட மொழித்தேர்ச்சிப் படிகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் பயிற்சி அமைச்சு செயலாளரின் 7/12/1/யூஜீசீ/2 ஆம் இலக்க 2003 யூலை 01 ஆந் திகதிய கடிதத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த அறிவுறுத்தல்களைக் கவனத்தில் கொள்ளாது மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தினால் மொழித்தோச்சிப் படியாக ரூபா 953,600 தொகை உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்காக பங்களிப்புத் தொகையினைச் செலுத்தும் போது கல்விசார் படிகளை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டாமென வரவு செலவுத்திட்ட பணிப்பாளர் நாயகத்தின் பீ/டீ/ஜஎன்எஸ்/சீஎல்யூஎஸ் - ஜி/078 ஆம் இலக்க 2003 யூலை 18 ஆந் திகதிய கடிதத்தில் காட்டப்பட்டிருந்தும் அந்த பங்களிப்புத்

தொகையினைச் செலுத்தும் போது அதற்கு முரணாகச் செயற்பட்டதன் காரணமாக 2010 ஆம் ஆண்டிற்காக பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கு ரூபா 2,854,929 தொகையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ரூபா 570,986 தொகையுமாக மேலதிகமாக பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------------------------------

### 2.1 நிதிசார் மீளாய்வு

------------------------------

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

----------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக விடுதிகளை உள்ளடக்கி பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகள் மீண்டுவரும் செலவுகளுக்கான அரசாங்க மானியத்தினையும் காலக் கழிவினையும் கணக்கிலெடுத்துக் கொள்வதற்கு முன்னர் ரூபா 946,766,058 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 934,282,325 ஆக இருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவுகளுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 773,200,000 தொகையான அரசாங்க மானியம் மற்றும் ரூபா 134,130,854 தொகையான காலக்கழிவின் காரணமாக அப்பற்றாக்குறை ரூபா 39,435,204 வரை குறைவடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 717,900,000 அரசாங்க மானியம் மற்றும் ரூபா 112,917,212 தொகையான காலக்கழிவின் காரணமாக அப்பற்றாக்குறை ரூபா 93,465,117 வரை குறைவடைந்திருந்தது.

#### 2.1.2 நிதிசார் முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆலோசனைச் சேவை ஒதுக்க நிதியத்தின் ரூபா 24,289,080 தொகை நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அப்பணத்தினை முதலீடு செய்து வட்டி வருமானத்தினை உழைத்துக் கொள்வது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்காக வழங்கப்பட்ட ரூபா 35,000,000 தொகையான காசோலையை

வங்கியில் வைப்புச் செய்வதிலுள்ள தாமதத்தின் காரணமாக ரூபா 300,000 வட்டி வருமானம் ஒன்று இழக்கப்பட்டிருந்தது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

---

### 2.2.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீதவரியினைச் செலுத்துவது தொடர்பாக ஆதனம் ஒன்றின் உரிமை மாற்றப்பட்டு 08 வாரங்களுக்குள் அது பற்றி உரிய உள்ளூராட்சி நிறுவனத்திற்குத் தெரியப்படுத்தி புதிய உரிமை பதிவுசெய்து கொள்ளப்படவேண்டிய போதிலும் பல ஆண்டுகளுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட 07 கட்டிடங்களினதும் ஆதனத்தினதும் உரிமை பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்படாது முன்னைய உரிமையாளரின் பெயரில் வீதவரி செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நிரந்தர ஆராய்ச்சிக் குழுவின் மூலம் சிபார்சுசெய்யப்பட்டு ரூபா 22,924,500 தொகை நிதிஏற்பாடு செய்யப்பட்ட 77 ஆராய்ச்சிக்களைப் பூர்த்திசெய்ய வேண்டிய காலம் கடந்திருந்த போதிலும் உரிய ஆராய்ச்சிகள் இன்றுவரை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 செயலாற்றல்

---

(அ) மீளாய்வாண்டில் சேவையில் ஈடுபட்டிருந்த விரிவுரையாளர்களின் எண்ணிக்கை பீட வாரியாகவும் ஒவ்வொரு விரிவுரையாளருக்குமான மாணவர் எண்ணிக்கையும் கீழே தரப்படுகின்றன.

| | பொறியியல் பீடம் | தகவல் தொழில்நுட்ப பீடம் | கட்டிடக்கலை பீடம் |
|---|---|---|---|
| நிரந்தர விரிவுரையாளர்களின் எண்ணிக்கை | 218 | 21 | 70 |
| பீடத்திலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை | 3105 | 395 | 1202 |
| ஒரு விரிவுரையாளருக்கான மாணவர்கள் எண்ணிக்கை | 14 | 18 | 17 |

(i) இரசாயன மற்றும் செயன்முறைப் பொறியியல் திணைக்களத்தில் மீளாய்வாண்டிற்கான நிரந்தர விரிவுரையாளர் எண்ணிக்கை 12 ஆகவும் பகுதிநேர விரிவுரையாளர்களின் எண்ணிக்கை 23 ஆகவும் இருந்தது. அதன் காரணமாக விரிவுரையாளர்களின் எண்ணிக்கையில் 65% பகுதிநேர விரிவுரையாளர்களாகக் காணப்பட்டன.

(ii) கணனி விஞ்ஞானம் மற்றும் பொறியியல் விஞ்ஞானத் திணைக்களத்தின் மீளாய்வாண்டின் போது நிரந்தர விரிவுரையாளர்களின் எண்ணிக்கை 16 ஆகவும் பகுதிநேர விரிவுரையாளர்களின் எண்ணிக்கை 52 ஆகவும் இருந்தன. அதன் காரணமாக விரிவுரையாளர்களின் எண்ணிக்கையில் 76% பகுதிநேர விரிவுரையாளர்களாகக் காணப்பட்டன.

(iii) இயந்திரப் பொறியியல் விஞ்ஞானத் திணைக்களத்தின் நிரந்தர விரிவுரையாளர்களின் எண்ணிக்கை 22 ஆக இருந்ததுடன் பகுதிநேர விரிவுரையாளர்களின் எண்ணிக்கை 31 ஆக இருந்தது. அதன் காரணமாக விரிவுரையாளர்களின் எண்ணிக்கையில் 58% பகுதிநேர விரிவுரையாளர்களாகக் காணப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டின் மாணவர் தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | **பொறியியல் பீடம்** | **தகவல் தொழில்நுட்ப பீடம்** | **கட்டிடக்கலை பீடம்** |
|---|---|---|---|
| சேர்த்துக்கொள்ளப்பட்ட பட்டதாரி மாணவர்களின் எண்ணிக்கை | 812 | 135 | 297 |
| வெளியாகிய பட்டதாரி மாணவர்களின் எண்ணிக்கை | 697 | 28 | 268 |
| கல்வி கற்றுவரும் மாணவர்களின் எண்ணிக்கை | 3105 | 395 | 1202 |

I. மீளாய்வாண்டில் சேவையில் ஈடுபட்டுள்ள நிரந்தர விரிவுரையாளர்களின் எண்ணிக்கை 309 ஆக இருந்ததுடன் ஒவ்வொரு விரிவுரையாளருக்குமான சராசரி மாணவர் எண்ணிக்கை 15 ஆக இருந்தது.

II. மீளாய்வாண்டின் போது மஹாபொல புலமைப்பரிசில் உதவியாக 2365 மாணவ்ர்களுக்கு ரூபா 7,939,600 செலுத்தப்பட்டிருந்ததுடன் 1466 மாணவர்களுக்கு புலமைப்பரிசிலாக ரூபா 9,392,700 செலுத்தப்பட்டிருந்தது.

III. மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு தவிர்த்து மீண்டுவரும் செலவு ரூபா 810,625,738 ஆக இருந்ததன் காரணமாக ஒரு மாணவர்களுக்கான கிரயம் ரூபா 172,400 ஆக இருந்தது.

IV. மீளாய்வாண்டின் போது 881 பட்டதாரி மாணவர்களுக்கும் 240 பட்டதாரி மாணவிகளுக்கும் விடுதி வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் விடுதிச் செலவு ரூபா 628,371 ஆக இருந்தது.

V. தகவல் தொழில்நுட்ப பீடத்தில் மீளாய்வாண்டில் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களின் எண்ணிக்கை 21% ஆக இருந்தது.

**2.2.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

**-----------------------------------**

பாதீடுசெய்யப்பட்ட வருமானம் மற்றும் செலவுகளுக்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவுகளுக்குமிடையே குறிப்பிடத்தக்க அளவான முரண்கள் காணப்பட்டதனால் பாதீடானது செயற்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் துணைவேந்தருக்கு அவ்வப்போது தெரிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) முற்பணங்கள் செலுத்துதலும் தீர்த்துவைத்தல்களும்

(ஆ) பட்டப்பின் படிப்பு கற்கைநெறி வருமானங்கள்

(இ) கடன்களை அறவீடுசெய்தல்

(ஈ) பேரேடுகளைப் பேணல்

(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஊ) உடன்படிக்கைகளை மீறல்கள்

(எ) ஆராய்ச்சி

(ஏ) துணைப் பதிவேடுகள்